# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:9** **தேதி:-30.06.2017**

## NFTE கூட்டணியின் போராட்டத்திற்கு BSNLஊழியர் சங்கம் ஆதரவு மற்றும் இதர செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

ஊதிய மாற்ற பிரச்சனைக்காக NFTE மற்றும் அதன் கூட்டணி சங்கங்கள் ஜூலை 3 மற்றும் 4ஆம் தேதிகளில் தொடர் உண்ணாவிரத போராட்டத்தை அறிவித்துள்ளனர். BSNL ஊழியர்களின் முக்கியமான பிரச்சனைக்காக இந்த போராட்டம் நடைபெற உள்ளதால் அந்த இயக்கத்திற்கு தனது ஆதரவை BSNL ஊழியர் சங்கம் தெரிவிக்க முடிவு செய்துள்ளது. எனவே மாவட்ட மாநில செயலாளர்கள் அந்த உண்ணாவிரதப் பந்தலுக்கு சென்று அந்த போராட்டத்தை வாழ்த்த வேண்டும் என மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**IDA 1.9% உயர்ந்துள்ளது:-** 2017 ஜூலை 1ஆம் தேதி முதல் நமது IDA 1.9% உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உயர்வையும் சேர்ந்து மொத்த IDA 119%ஆக இருக்கும்.

**ஒப்பந்த ஊழியர்களின் மாற்றப்பட்ட ஊதியம்:-** 19.01.2017 அன்று மத்திய அரசின் கெஜெட் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்ட ஒப்பந்த ஊழியர்களின் மாற்றப்பட்ட ஊதியத்தை அமலாக்கியது தொடர்பான விவரங்களை மாநில நிர்வாகங்கள் 10.07.2017 அன்றைக்கு முன் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டுமென கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவு வெளியிட்டுள்ளது.

**தேசியக் கவுன்சில் கூட்டம்:-** ஒத்தி வைக்கப்பட்ட தேசியக் கவுன்சில் கூட்டம் 06.07.2017 அன்று நடைபெறும் என கார்ப்பரேட் அலுவலகம் அற்விப்பு வெளியிட்டுள்ளது.

**BSNL நிர்வாகத்திற்கு கொடுத்து வந்த ஒத்துழைப்பை விலக்கிக் கொள்வதை 01.07.2017 முதல் அமலாக்க வேண்டும்:-** BSNLல் உள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்கள் BSNL நிர்வாகத்திற்கு கொடுத்து வந்த ஒத்துழைப்பை 01.07.2017 முதல் விலக்கிக் கொள்வது என முடிவு செய்துள்ளன. இந்த முடிவை உறுதியாக அமலாக்க வேண்டும் என மாவட்ட மாநில சங்கங்களை மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. இந்த முடிவின் அடிப்படையில் ஊழியர்களும், அதிகாரிகளும் தங்களின் இயல்பான பணிகளை மட்டும் செய்ய வேண்டும். அவர்கள் கூடுதலாக பணி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அமைதியான போராட்டங்கள் நடத்துவதைக் கூட அனுமதிக்காத BSNL நிர்வாகத்தின் தொழிற்சங்க உரிமைகளை மறுக்கும் போக்கினைக் கணக்கில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**மத்திய சங்கத்தின் முடிவுகளை சிரமேற்கொண்டு அமலாக்குவோம்.**

**வாழ்த்துக்களுடன்**,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**